11th August 1965]

Sugarcane Road Development Cess Fund

* 219 Q.—SRI K. NARAYANASWAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to complete the laying of the Tyagadurgam-Sankarapuram and Kallakurichi-Peria Pagandai roads out of the Sugarcane Road Development Cess Fund so as to facilitate easy transportation to the Kallakurichi Co-operative Sugar Mills; and

(b) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (a) No; and

(b) Does not arise.

Plant Protection Squads

* 220 Q.—SRI K. NARAYANASWAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased state—

(a) the number of plant protection squads in the State; and

(b) the number of acres protected during 1963–64?

THE HON. SRI P. KAKKAN : (a) The following are the staff functioning exclusively for the plant protection work in this State—

(i) General—

Crop and Plant Protection Officers—6

Technical Assistants—6

Plant Protection Assistants—48

Demonstration Maistries—48

(ii) *Package programme in Thanjavur district*—

Plant Protection Specialist—1

Plant Protection Assistant—1

(iii) *Oilseeds Development Scheme*—

There are three other Plant Protection Squads, each with one Plant Protection Assistant and Four Fieldmen.

(b) 24.87 lakhs acres.

Coconut Plantations

* 221 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to extend the special scheme for the grant of loans for raising coconut plantations to Thirupathur taluk in Ramanathapuram district; and

(b) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (a) No; and

(b) Does not arise.

[11th August 1965

9-30 a.m. **திரு. செ. மாதவன் :** இராமநாதபுரம் மாவட்டத்தில் சில குறிப்பிட்ட தாலூகாக்களில் மாத்திரம் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மற்ற தாலூகாக்களிலும் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தத் திட்டத்தின் கீழ் முதலில் மிகவும் பின்தங்கிய பகுதிகளான ராமநாதபுரம் தாலூகாவையும், முதுகுளத்தூர் தாலூகாவையும் எடுத்துக் கொண்டிருக்கிறது. இப்போது பரமக்குடி தாலூகாவையும் எடுத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இலங்கையிலிருந்து வந்தவர்களுக்கு உடனடியாக வசதி செய்து கொடுக்கும் பொருட்டு அந்தத் தாலூகாக்களில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

Increase in prices of foodstuffs in City Hotels

* 223 *Q.*—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Food be pleased to state the steps taken by the Government to arrest the sudden increase in price of the foodstuffs in hotels in Madras City?

The Hon. Sri V. RAMAIAH : The Government have examined the reasons for the increase in prices for edibles and meals in some hotels in the city and are satisfied that the extent of the increase is not out of proportion to the increase noticed in the prices of various foodgrains, vegetables, etc., considering the cost structure in the preparation of the dishes. The Government are, however, keeping a close watch over the situation so that no scope is given for profiteering by the hotel-keepers. They are also fully engaged in controlling the price level of the ingredients.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஹோட்டல்களில் உணவுப் பொருள்களில் விலை ஏறிக்கொண்டே போகிறதே தவிர, அளவுகள் எல்லாம் குறைந்து கொண்டே வருகின்றன. இட்டிலி, போண்டா, வடை போன்ற பொருள்களின் விலை ஏறுகின்ற நிலையில் உருவத்தில் குறைந்துகொண்டே போவதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : இப்போது இருக்கும் நிலை ஸ்திரமானதாகத்தான் இருக்கிறது. சமீபத்தில் பெரும் அளவுக்கு அவற்றின் அளவு ஒன்றும் குறையவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : இட்டிலியின் உருவம் குறைந்திருக்கிறது என்பதை அறிந்துகொள்ள ஒரு நாள் அமைச்சர் அவர்கள் பரிசோதனை செய்வதற்காக ஹோட்டலில் போய் சாப்பிட முன் வருவார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : நான் சாப்பிட்டு முடிவுக்கு வர வேண்டியதில்லை. கனம் அங்கத்தினர்கள் சாப்பிட்டு குறைபாடுகளைப்பற்றி எழுதினால் கவனிக்கிறேன்.